## கதிர்காமம் பிரதேச சபை

## மொனராகலை மாவட்டம்

---

1. நிதிக் கூற்றுக்கள்

---

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

---

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மே 18 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஜுன் 23 ஆந் திகதி சபைச் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

---

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கதிர்காமம் பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் காசோட்டமும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

---

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்குச் சொந்தமான 21 காணித் துண்டுகளின் பெறுமதியினை ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்சார் பெறுமதி மதிப்பீட்டாளர் ஒருவர் மூலம் பெறுமதி மதிப்பீடு செய்து நியாயமான பெறுமதியினை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது உடைத்து அகற்றப்பட்ட ரூபா 621,595 தொகை பெறுமதியான பழைய சபைக் கட்டிடத்தின் பெறுமதியினை நிதிக் கூற்றுக்களில் இருந்து அகற்றியிருக்கவில்லை.

(இ) சபைக்குச் சொந்தமான கதிர்காமம் பஸ் நிலையக் கட்டிடத்தின் பெறுமதியினை ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில் தகைமையுடைய பெறுமதி மதிப்பீட்டாளர் ஒருவரினால் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டு ஆரம்பத்தில் உள்ளவாறு பெற வேண்டிய நீதி மன்றத் தண்டப் பண வருமானம் ரூபா 2,667,793 தொகையாகக் காணப்பட்ட போதிலும் ரூபா 1,500,000 தொகை என ரூபா 1,167,793 தொகை குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(உ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெற வேண்டிய வாகனத் தரிப்பிட வருமானம் ரூபா 245,120 தொகையினை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

-----------------------------------------------------------------------------------------

07 கணக்க விடயங்கள் தொடர்பாக நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 11,161,377 தொகையாகக் காணப்பட்டதுடன் பதிவேடுகள் மற்றும் துணைப் பதிவேடுகளின் பிரகாரம் மீதி ரூபா 4,015,208 ஆக இருந்தது.

1.3.3 தொங்கல் கணக்குகள்

-----------------------------------

2013 ஆண்டு முதல் நிதிக் கூற்றுக்களின் தொடர்ச்சியாக முன்கொண்டு வந்து காணப்பட்ட ரூபா 16,971 தொகைக்கான தொங்கல கணக்கின் மீதி இனங்காணாமல் திரண்ட நிதியத்திற்கு பதிவழிக்கப்பட்டிருந்தது.

1.3.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

---------------------------------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) எந்த சாராரிடம் அறவிடப்பட வேண்டும் என இனங்காணப்படாத கடை வாடகை ரூபா 6,349,592 தொகையினை அறவீடு செய்வதற்காக மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட வேண்டிய 2009-2013 காலப் பகுதிக்குரிய பெறுமதி கூட்டிய வரி ரூபா 4,319,539 தொகை மற்றும் 2009-2015 காலப் பகுதிக்கான முத்திரைக் கட்டணம் ரூபா 330,176 தொகையினை மீளாய்வாண்டின் போதும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு உள்ளூராட்சி ஓய்வூதியத் திணைக்களத்திற்கு செலுத்தப்பட வேண்டியிருந்த ரூபா 414,605 தொகையின் நிலுவை ஓய்வூதியத்தை மீளாய்வாண்டின் போதும் தீர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

---------------------------------------------------------------

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 131,896,864 தொகைக்கான 5 சொத்து விடயங்கள் மற்றும் கூட்டுத்தொகை ரூபா 14,005,744 தொகைக்கான 7 பொறுப்பு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்வற்கு முடியாதிருந்தது.

1.3.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

------------------------------------------------------------------------------------------------------------

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மை சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) இலங்கைக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | |
| (i) நி.பி. 71 | 2014 நவம்பர் 12 திகதிய 25/2014 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கைக்கு முரணாக அமைய அடிப்படையில் கடமையாற்றிய 02 காவலாளிகள் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு வெளியே நிரந்தர சேவைக்கு நியமனம் செய்யப்பட்டிருந்தனர். |
| (ii) நி.பி. 103 மற்றும் 104 | சபைக்கு சொந்தமான இலக்கம் WPZA-5063 கொண்ட பெக்கோ லோட்டர் வண்டி மற்றும் PD-1846 கொண்ட கப் வண்டி முறையே 2015 ஜூலை 29 மற்றும் 2013 திசெம்பர் 05 திகதி விபத்துக்கு உள்ளாகியிருந்த போதிலும், ஆரம்ப மற்றும் இறுதி விசாரணை அறிக்கைகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டம் | |
| 49 ஆம் பிரிவு | திட்டக் குழுவின் அங்கீகாரம் இன்றி சபையின் அதிகாரப் பிரதேசத்தில் 2 தொலைபேசி கம்பனிகளினால் 5 டவர்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 9,431,284 ஆகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் வருமானத்தை மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,197,295 தொகையாக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 8,233,989 இற்கான அதிகரிப்பு ஒன்றினைக் காட்டியது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 வீத வரி

(அ) ரூபா 10,000 இனை விஞ்சிய 132 வீத வரி அலகுகளில் இருந்து ரூபா 3,826,275 தொகை ஒன்று அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவுகள் 155,156,157,158,159 மற்றும் 163 ஏற்பாடுகளின் பிரகாரம் அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) சபையின் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் 13 பேர் வருமானம் சேகரிப்பதற்காக ஈடுபடுத்தப்பட்டிருந்த போதிலும் நிலுவை வீதவரி அறவீடு செய்யும் 23 சதவீதமும் மற்றும் நடைமுறை ஆண்டில் வீத வரி அறவீடு 48 சதவீதம் ஆகிய குறைந்த சதவீதத்திலேயே காணப்பட்டது.

2.2.2 கடை வாடகை

-----------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2013 ஆண்டின் போது அரச பெறுமதி மதிப்பீட்டாளர் மூலம் கடை வாடகை பெறுமதி மதிப்பீடு செய்திருந்த போதிலும் அந்த புதிய பெறுமதி மதிப்பீட்டின் பிரகாரம் வாடகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமையால் ரூபா 321,350 தொகை வருமானம் ஒன்றினை சபை இழந்துள்ளது.

(ஆ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு சபைக்குச் சொந்தமான கடைகளில் இருந்து அறவிடப்பட வேண்டியிருந்த நிலுவை வாடகை ரூபா 6,351,392 ஆகும்.

(இ) சபைக்குச் சொந்தமான 74 கடைகள் வாடகைக்குக் கொடுத்திருந்த போதிலும் உடன்படிக்கை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.3 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

-----------------------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டியிருந்த நீதி மன்றத் தண்டப் பணம் ரூபா 4,921,145 தொகை கிடைக்க வேண்டியிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான பெற வேண்டிய முத்திரைக் கட்டண எண்ணிக்கையை இனங்கண்டிருக்கவில்லை.

2.2.4 ஏனைய வருமானங்கள்

----------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது எஸல விழாவிற்காக அனுசரணை வழங்கும் 12 நிறுவனங்களுக்கு 18 வர்த்தக குடில்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் நுகர்வோர்களிடம் கட்டணம் ஏதும் அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) வாகனத் தரிப்பிட வருமானம் சேகரிப்பதற்காக கமிஷன் வழங்கும் அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட 4 ஊழியர்கள் மற்றும் நிரந்தர மற்றும் பதிலீட்டு ஊழியர்கள் 02 பேர்களுக்கு வழங்கியிருந்த பற்றுச் சீட்டுகளில் இருந்து அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 245,120 தொகையினை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) சபையின் அதிகாரப் பிரதேசத்தில் நிறுவப்பபட்டிருந்த 6 செலுத்துகை டவர்களில் இருந்து 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 152 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் வருடாந்த வாடகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.3 மிகை விதிப்பு

-----------------------------

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பொறுப்பு சொல்லவேண்டிய நபர்களுக்கு எதிராக என்னால் முன்னைய ஆண்டுகளின் போது விதிக்கப்பட்ட மிகை விதிப்புக்கள் தொடர்பாக மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 104,017 தொகையொன்று அறவிடப்பட வேண்டியிருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

------------------------------------

3.1 செயற்பாட்டுத் திறமையின்மை

---------------------------------------------------

மின் சக்தி அமைச்சுச் செயலாளரின் 2010 ஆகஸ்ட் 17 திகதிய கடிதத்தின் பிரிவு 2(1) இன் பிரகாரம் வீதி விளக்குகள் செயற்படுத்துதல் மற்றும் பராமரித்தலுக்கான கட்டணம் செலுத்தும் அடிப்படையில் உள்ளூராட்சி நிறுவனங்கள், வீதி விளக்குகளை செயற்படுத்தல் மற்றும் பராமரித்தலுக்காக சேவை வழங்குனர் ஒருவராகக் கடமையாற்ற வேண்டும். எனினும் அவ்வாறு மேற்கொள்ளாமல் மீளாய்வாண்டின் போது இதற்காக சபை நிதியத்தில் இருந்து ரூபா 96,600 செலவு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.

3.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்

-----------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2014 நவம்பர் 23 திகதி புத்தள பிரதேச சபையில் இருந்து சபைக்கு வழங்கியிருந்த 88 ஜீ.ஐ. குழாய்களில் 21 குழாய்கள் காணாமல் போயிருந்தன. இது தொடர்பாக முறையான விசாரணை ஒன்று மேற்கொள்ளப்பட்டு பொறுப்பு சொல்ல வேண்டிய சாரார்ரை இனங்கண்டு குறிப்பிட்ட பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 2013 திசெம்பர் 05 வீரவிலயில் விபத்துக்குள்ளாகிய இலக்கம் PD-1846 கொண்ட சபைக்குச் சொந்தமான கப் வண்டியை பழுதுபார்த்தல் மேற்கொள்வதற்காக மாத்தறைக்குக் கொண்டு செல்வதற்காக ரூபா 25,000 செலுத்தியிருந்த போதிலும் அப் பணத்தை பொறுப்பு செல்ல வேண்டிய சாரரிடம் அறவீடு செய்வதற்காக அல்லது காப்புறுதியில் இருந்து அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

3.3 திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்

-------------------------------------------------------------------------

பிரதேச சபையினால் 2005 ஆண்டின் போது ரூபா 431,541 தொகையான செலவு ஒன்று மேற்கொள்ளப்பட்டு கலபிடகல பிரதேசத்தில் சேதனப் பசளை உற்பத்தி கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் 2016 மே 30 வரையும் குறிப்பிட்ட கட்டிடம் குறிப்பிட்ட கருமத்திற்காக பயன்படுத்தியிருக்கவில்லை.

3.4 மனித வள முகாமைத்துவம்

-----------------------------------------------

(அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 19(1)(1) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் உள்ளூராட்சி ஆணையாளரின் பூர்வாங்க எழுத்துமூலமான அங்கீகாரம் இன்றி 1995 முதல் 2014 வரை அமைய மற்றும் பிரதியீட்டு அடிப்படையில் 22 தொழிலாளர்கள் சேர்க்கப்பட்டு மொத்தச் சம்பளம் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியப் பங்களிப்புத் தொகையாக ரூபா 21,694,084 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 05 பதவிகள் தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினை மிகைத்து 34 ஊழியர்கள் மீளாய்வாண்டின் போது சேர்க்கப்பட்டு சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) தொழிலாளர் பதவி ஒன்றிற்காக தன்னிச்சை அடிப்படயில் 2014 மார்ச் 01 முதல் நியமனம் ஒன்று வழங்கியிருந்த போதிலும் 2014 மார்ச் முதல் மீளாய்வாண்டு இறுதி வரை சம்பளங்கள் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியப் பங்களிப்புத் தொகையாக ரூபா 422,917 தொகை ஒன்று செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) சபையின் பதவியணியில் வெற்றிடங்கள் காணப்படாத போதிலும் உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரம் இன்றி தன்னிச்சை அடிப்படையில் சேர்க்கப்பட்ட 4 ஊழியர்களுக்கு 2015 ஜனவரி முதல் திசெம்பர் வரை ரூபா 336,200 தொகையான படியொன்று செலுத்தப்பட்டிருந்தது. இந்த நபர்கள் ஆட்சேர்ப்பின் அடிப்படையும் கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்படவில்லை.

(உ) பிரதேச சபையின் தீயணைக்கும் படைச் சேவைக்காக 08 ஊழியர்கள் ஈடுபடுத்தியிருந்த போதிலும், தீயணைக்கும் படைக்கு தேவையான வாகனம் 2015 ஜூலை 29 திகதி முதல் செயற்படாது காணப்பட்டது. தீ அணைக்கும் படையின் ஊழியர்களை வேறு தீயணைக்கும் அலகுகள் காணப்படும் நிறுவனங்களுக்கு இணைப்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

---------------------------------------------------

விளைவற்ற மற்றும் குறைபயன்பாட்டுச் சொத்துக்கள்

---------------------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2015 மே 07 திகதி மற்றும் 2015 ஜூலை 06 திகதி கிடைத்திருந்த போடேன் பெக்கோ லோடர் மற்றும் மோட்டார் கிரேடர் இயந்திரம் என்பன எதுவித கருமங்களுக்கும் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது. அத்துடன் இயற்கை இடர்களுக்குள்ளாகிய நிலையில் அலுவலக வளவில் நிறுத்தப்பட்டிருந்தது.

(ஆ) பிரதேச சபையினால் நனஸல ஒன்று ஆரம்பிப்பதற்காக 2014 நவம்பர் 18 திகதி இலங்கை தகவல்கள் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையத்தின் மூலம் 4 கணனிகள் மற்றும் அதனோடு தொடர்புடைய துணைக் கருவிகள் வழங்கியிருந்த போதிலும் நனஸல ஆரம்பிப்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டு ஜனவரி மாதம் ரூபா 176,700 தொகை செலுத்தி சம்பளங்கள் தயாரிப்பதற்காக கொள்வனவு செய்திருந்த மற்றும் அச்சு இயந்திரம் ஆகியவற்றை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

4. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

-------------------------------------------------------------------

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

----------------------------------

மீளாய்வாண்டிற்காக சபையினால் தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் மூலம் மதிப்பீட்டு வருமானம், செலவுகள் மற்றும் ஆண்டிற்கான உள்ளவாறான வருமானம், செலவுகள் இடையே காணப்படும் முக்கியமான முரண்களின் பிரகாரம் வருமானம் மற்றும் செலவுகளின் கட்டுப்பாட்டில் பாதீடு ஆக்க பூர்வமான கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

4.2 சுற்றாடல் சார் மற்றும் சமூகப் பொறுப்பினை நிறைவேற்றல்

------------------------------------------------------------------------------------------------------

அனைத்து அரச நிறுவனங்களும் தனது தூரநோக்கு மற்றும் பணியை நிறைவேற்றும் செயற்பாட்டில் அந்த நிறுவனத்திற்கு பொருத்தமான சுற்றாடல் சார் மற்றும் சமூக பொறுப்புக்களை இனங்கண்டு அவற்றை நிறைவேற்றுவதற்கான வழிமுறைகளை கடைபிடிக்க வேண்டிய போதிலும் சபையினால் அவர்களின் சுற்றாடல் சார் சமூகப் பொறுப்புக்களை இனங்காண்பதற்கான நடைமுறை ஒன்றினை தயாரித்து செயற்படுத்தியிருக்கவில்லை.

4.3 வருடாந்த பெறுகைகள் திட்டம்

----------------------------------------------------

சபையினால் மீளாய்வாண்டிற்கான வருடாந்த பெறுகைகள் திட்டம் ஒன்று தயாரித்திருக்கவில்லை.

4.4 உள்ளகக் கணக்காய்வு

-------------------------------

மாகாண சபையின் உள்ளகக் கணக்காய்வு அலகின் மூலம் போதியளவு உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

4.5 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

-----------------------------------------------------------------------

2009 ஜூன் 09 திகதிய முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்தின் DMA/2009(1) இலக்கங் கொண்ட முகாமைத்துவக் கணக்காய்வுச் சுற்றறிக்கையின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு வழிகாட்டல் சுற்று நிருபத்தின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அமைப்பதற்காக மீளாய்வாண்டு வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

-----------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) அகக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) வாகனப் பாவணை

(உ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஊ) களஞ்சியக் கட்டுப்பாடு